231

# போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்




C. Venkatachalam
S. 1941-43.

*Editor ... A. Lourduswami, B.A., L.T.*
*Publi... ...raining School, Trichinopoly.*

JL
வை;N11PP
N142.33.1
182298

...5 ஜூலை 1942 மலர் 1

...முறை பாடசாலை, திருச்சிறாப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா $1\frac{1}{2}$.

# போதனா விஷய பூங்கொத்து

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | பத்திராதிபர் குறிப்புகள் ... ... | 1 |
| 2. | Results of the T. S. L. C. Examination, March, 1942 ... | 3 |
| 3. | ஆசிரியத்துவமும் அணியியலும் ... ... | 7 |
| 4. | விடுகதை ... ... ... ... | 8 |
| 5. | கல்வி ... ... ... ... | 9 |
| 6. | கணிதபோதனையில் உபகரணங்கள் அவசியமாவதேன்? | 10 |
| 7. | List of A. R. P. Slogans ... ... | 13 |
| 8. | பாடக்குறிப்புகள் ... ... ... | 14 |
| 9. | விடுகவி விடை ... ... ... | 15 |
| 10. | பள்ளிக்கூடத் தோட்டம் ... ... ... | 16 |
| 11. | எனது பிறப்பு ... ... ... | 18 |
| 12. | விவசாயப் பழமொழிகள் ... ... ... | 19 |
| 13. | நம் பாடசாலை நிகழ்ச்சிகள் ... ... ... | 20 |
| 14. | சிறு கதை ... ... ... ... | 20 |
| 15. | யோசனைக்கணக்கு ... ... ... | 21 |
| 16. | மருந்து மூலிகைகள் ... ... ... | 22 |
| 17. | யோசனைக்கணக்கு விடை ... ... ... | 22 |
| 18. | சுகாதாரம் ... ... ... ... | 23 |
| 19. | கோலாட்டம் ... ... ... ... | 24 |

---

# போதனா விஷயப் பூங்கொத்து

## காரியாலயம்

பூங்கொத்து காரியாலயத்திற்கு மணியார்டர் செய்யும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் முழு விலாசத்தையும், சந்தா நம்பரையும் தெளிவாகக் கூபனில் எழுதினால் நலமாக இருக்கும்.

பத்திராதிபர்.

Imprimatur: ✠ JAMES, *Bishop of Trichinopoly.*



# போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து 33]  15 ஜூலை 1942  [மலர் 1

## பத்திராதிபர் குறிப்புகள்

**பூங்கொத்தின் புது மலர்.**—சென்ற ஜூன்மாதத்தோடு நமது பூங்கொத்தின் 32-வது ஆண்டு நிறைவுற்று, இந்த ஜூலை மாதத்திலிருந்து இதன் 33-வது கொத்தும் அதன் முதல் மலரும் தொடங்குகின்றது. இச்சந்தர்ப்பத்தில், நமது பூங் கொத்தைப் பரிவுடன் ஆதரித்துவரும் நம் பழய மாணவர்க்கும், ஏனைய பூங்கொத்து நேயர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

அன்னவர் இதுகாறும் ஆதரித்துவந்ததுபோல் இனிமேலும் நம் பூங்கொத்தை அபிமானித்துத் தத்தம் சந்தாக்களைப் புதிப்பித்து, இன்னும் பல புதுச்சந்தாதாரர்களைச் சேர்த்துப் பூங்கொத்தின் பயனை அனைவரும் அடையுமாறு செய்யக் கோருகின்றோம்.

பூங்கொத்துச் சந்தாவை மணியார்டர் (M. O.) மூலம் அனுப்புவோர் தயவுசெய்து, தங்கள் பழய நம்பரையும், விலாசத்தையும் தெளிவாய் எழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். நம் பூங்கொத்து நேயரனைவர்க்கும் நம் வாழ்த்துக்களை இப் புது மலர் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

* * *

**T. S. L. C. பரீட்சை 1942.** சென்ற வருடம் மார்ச்சு மாதம் நடைபெற்ற T. S. L. C. பரீட்சையில், நமது பாடசாலை **சேக்கண்டரி** கிரேடு மாணவர்களும், **எலிமேண்டரி ஹையர்** கிரேடு மாணவர்களும் வழக்கம்போல் திறமையாய்த் தேறியுள்ளார்கள். ஷை பரீட்சையில் முதன்மையாகத் தேறியுள்ள செக்கண்டரி கிரேடு மாணவர் Mr. George Sydney (56 மார்க்கு); எலிமெண்டரி ஹையர்கிரேடு மாணவர் Mr. G. Savarimuthu (53 மார்க்கு), ஆகிய இவர்களுக்கும்; இரண்டாவதாகத் தேறியுள்ளவர்கள் செக்கண்டரி கிரேட், Mr. Gurunathan alias John (53) & Mr. A. Manuel (53); எலிமெண்டரி ஹையர்கிரேட், Mr. K. Arockiam (51); Mr. T. Santiago (51) ஆகிய இவர்களுக்கும் எமது மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவிப்பதுடன், நம் **பாடசாலைத் தினக் கோண்டாட்டத்தன்று** இவர்கள் ஒவ்வொருவருக்கும் வழக்கம் போல் **போன் போறித்த வேள்ளிப்பதக்கம்** ஒன்று வழங்கப் படுமென்பதையும் அறிவிக்கின்றோம்.

செக்கண்டரி கிரேடில் நூற்றுக்கு 94-ம், எலிமெண்டரி கிரேடில் நூற்றுக்கு 87-ம் பாஸ்செய்துள்ளார்கள். இதன் முழு விவரத்தையும் மற்றோரிடத்திற் காண்க. தேறியுள்ள மாணவர் எல்லோருக்கும் எமது மகிழ்ச்சியையும் வாழ்த்துதல்களையும் கூறுகின்றோம்.

* * *

**நமது பாடசாலை வருஷத்தியானம்.** இஃது அடுத்த ஆகஸ்டு மாதம் 12, 13, 14 தேதிகளில் வழக்கம்போல் நடைபெறும். அச்சமயம் தியானம்செய்யவிரும்பும் நம் பழய மாணவர்கள் தத்தம் விருப்பத்தை முன்னதாகவே இப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்க்கு எழுதித் தகவல்கேட்டுத் தெரிந்துகொள்ளக்கடவர். போஜன வசதி முதலிய செலவுகளுக்காக நமது பழய மாணவர்க்கென குறைந்த சார்ஜில் ஏற்பாடுகள் செய்யப் படும்.

---

உபாத்தினி :—மேஜையின்மேலிருந்த 4 ஈக்களில் ஒன்றை அடித்து கொன்றுபோட்டேன் ; அப்போ எத்தனை ஈ இருக்கும்?

சிறுமி :—ஒன்றுதான் இருக்கும்.—செத்த ஈ.

---

சென்னை-600 008
182298

# R. C. Boarding and Training Institution, Trichinopoly

## RESULTS

**Training School Leaving Certificate Examination, March 1942.**

### Secondary Grade - Revised Scheme

| No. | Candidates Passed : Name | Percentage of Marks |
|---|---|---|
| 12198 | N. Kumarasamy | 46 |
| 12199 | T. S. Chandrasekaran | 39 |
| 12200 | S. Kuppuswamy | 43 |
| 12201 | George Sydney | 56—I |
| 12202 | A. James | 43 |
| 12203 | S. Savarimuthu | 42 |
| 12204 | I. Savarimuthu | 48 |
| 12205 | V. S. Arulanandam | 46 |
| 12206 | V. Rajagopalan | 48 |
| 12207 | K. Srinivasan | 47 |
| 12208 | M. Grunathan alias John | 53—II |
| 12209 | G. Kulandaisami | 51 |
| 12210 | S. Samathanam | 44 |
| 12211 | N. R. Thiruvangadam | 51 |
| 12212 | L. G. Srinivasan | 45 |
| 12213 | S. R. Krishnaswamy | 43 |
| 12214 | L. A. Ramalingam | 41 |
| 12215 | S. Maria Louis | 50 |
| 12216 | V. Arulappan | 51 |
| 12217 | G. Kolandaisamy | 45 |
| 12218 | M. Visuvasam | 46 |
| 12219 | G. Arokiasami | 47 |
| 12220 | S. A. Ranganathan | 47 |
| 12222 | A. Stanislaus | 44 |
| 12223 | R. Arpudam | 46 |
| 12225 | A. Manuel | 53—II |
| 12226 | G. T. Joseph | 40 |
| 12228 | K. Rajaraman | 41 |
| 12229 | A. M. Angelus Fernando | 43 |
| 12230 | P. A. Dawson | 44 |
| 12231 | P. Lazar | 48 |
| 12232 | S. Amalorpavam alias Lourdusamy | 49 |
| 12233 | M. Nagarajan | 49 |

| No. | Candidates failed : Name | Group of subjects in which failed |
|---|---|---|
| 12197 | S. Rajagopalan | B |
| 12221 | A. Joseph | B D |
| 12224 | S. Ganesan | B |
| 12227 | D. Maria Joseph | D |
| 12234 | N. Pranatharthiharan | B |

**Note:** B=English – Methods & Texts. D=Tamil — Texts & Methods.

## Elementary Grade — Revised Scheme

| No. | Name | Percentage of Marks |
|---|---|---|
| 15572 | K. M. Chinnaswamy ... ... ... | 44 |
| 15573 | D. Paul ... ... ... | 44 |
| 15574 | P. Manickam alias Susaimanickam ... ... | 41 |
| 15576 | G. Pattabhiraman ... ... ... | 39 |
| 15578 | A. Doraisamy ... ... ... | 40 |
| 15579 | A. Mathias ... ... ... | 44 |
| 15580 | S. S. John ... ... ... | 40 |
| 15581 | A. Arokiasami ... ... ... | 41 |
| 15583 | S. Joseph ... ... ... | 42 |
| 15585 | K. Arockiam ... ... ... | 51—II |
| 15586 | S. Antony ... ... ... | 43 |
| 15587 | A. Alphonses ... ... ... | 43 |
| 15588 | A. Packiam ... ... ... | 45 |
| 15589 | A. Irudayam ... ... ... | 45 |
| 15590 | S. Sandanam ... ... ... | 36 |
| 15592 | S. Gabriel ... ... ... | 34 |
| 15593 | C. Dyrianathan ... ... ... | 39 |
| 15594 | M. Joseph ... ... ... | 42 |
| 15596 | P. Michael ... ... ... | 43 |
| 15597 | S. Asirvadam ... ... ... | 37 |
| 15598 | V. R. Swamikannu ... ... ... | 34 |
| 15599 | S. Vedamuthu ... ... ... | 40 |
| 15600 | K. A. Yesurathanam ... ... ... | 49 |
| 15601 | S. Joseph Sundaram ... ... ... | 46 |
| 15602 | A. Ignashmuthu ... ... ... | 41 |
| 15603 | A. Bangar ... ... ... ... | 36 |
| 15604 | S. Viagula Sesudian ... ... ... | 47 |
| 15606 | S. Gnanapragasam ... ... ... | 44 |
| 15607 | G. Savarimuthu ... ... ... | 53—I |
| 15609 | A. Rayappan ... ... ... | 38 |
| 15610 | T. Santiago ... ... ... | 51—II |
| 15611 | T. Savaria Pitchai ... ... ... | 46 |
| 15612 | R. M. Vincent ... ... ... | 48 |
| 15615 | R. Devasagayam ... ... ... | 40 |
| 15616 | A. Ramaswami alias Raja Michael ... ... | 47 |
| 15617 | A. S. Sebastian ... ... ... | 49 |
| 15618 | D. Ponnusami ... ... ... | 41 |
| 15619 | S. Ponnumany ... ... ... | 40 |
| 15622 | S. Savarimuthu ... ... ... | 37 |
| 15623 | G. A. Adaikalasamy ... ... ... | 47 |
| 15624 | D. Ignacimuthu ... ... ... | 40 |
| 15626 | G. Joseph Rajamony ... ... ... | 43 |
| 15628 | S. Madalaimuthu ... ... ... | 38 |
| 15629 | A. Savarimuthu ... ... ... | 34 |
| 15630 | A. Susai Manickam ... ... ... | 47 |

| No. | Name | Percentage of Marks |
|---|---|---|
| 15631 | S. Arokiasamy ... ... ... | 40 |
| 15632 | M. Asirvatham ... ... ... | 35 |
| 15633 | C. Gabriel Dairyanathan ... ... | 44 |
| 15635 | S. E. Arulraj ... ... ... | 47 |
| 15636 | S. Ignaci ... ... ... ... | 43 |
| 15637 | R. Marianayagam ... ... ... | 45 |
| 15638 | R. Susai Lourdu ... ... ... | 47 |
| 15639 | M. Mark Stephen ... ... ... | 47 |
| 15640 | T. Pitchai Arokiam ... ... ... | 45 |
| 15642 | A. Soosaimanickam ... ... ... | 39 |
| 15643 | S. Emmanuel ... ... ... | 45 |
| 15645 | S. Maria Yagappan ... ... ... | 47 |
| 15646 | P. Arpudaswamy ... ... ... | 49 |
| 15647 | S. Arthanas ... ... ... | 46 |
| 15649 | U. Arokiaswami ... ... ... | 43 |

| No. | Candidates failed: Name | Group of subjects in which failed |
|---|---|---|
| 15575 | K. A. Susai... ... ... | A C |
| 15582 | A. S. Sebastian ... ... | C |
| 15584 | I. Singarayan ... ... | A |
| 15591 | C. Gnanapragasam ... ... | C |
| 15595 | A. Antony ... ... ... | C |
| 15605 | K. Mariaselvam ... ... | C |
| 15608 | M. Govindasami alias Susai Arpudam ... | A |
| 15613 | M. Arokiam ... ... ... | A C |
| 15614 | M. Francis ... ... ... | A C |
| 15620 | D. Dharmarayar ... ... | A C |
| 15621 | D. M. Devasahayam ... ... | D |
| 15625 | S. Stanislaus ... ... | A |
| 15634 | S. Pitchai ... ... ... | A C |
| 15641 | M. Antonisamy ... ... | A |
| 15644 | M. Rajendram ... ... | A |
| 15648 | A. Chinnappan ... ... | A |
| 15577 | S. Sebastian ... ... ... | All |

**Note:** A=Child Nature and Education and School Administration
C=Methods of Teaching Mathematics and Nature Study and Gardening.

D=Methods of Teaching Indian History and Civics and Geography and Rural Social Problems.

## Elementary Higher Grade — Old Scheme

| No. | Name | Percentage of Marks |
|---|---|---|
| 9077 | M. S. Santiago ... ... ... | 44 |
| 9078 | P. Ignacymuthu ... ... ... | 36 |
| 9079 | D. Irudayaswami ... ... ... | 39 |
| 9080 | N. Arokiasami ... .. ... | 39 |

| No. | Name | Pecentage of Marks |
|---|---|---|
| 9081 | K. G. Kulandaiswami | 36 |
| 9082 | S. Gregory | 38 |
| 9186 | M. Lourdusamy | 36 |
| 9187 | L. Ignaci | 51 |
| 9140 | G. Thangaraj | 38 |
| 9141 | Baha alias Michaelsamy | 41 |
| 9388 | S. Sreenivasagam | 37 |
| 9009 | P. Adaikalam | 33 |

| No. | Candidates failed : Name | Subjects in which failed |
|---|---|---|
| 9185 | S. Antony | First Language & Ele. Sociology |
| 9388A. | S. Joseph | Ely. Mathematics |
| 9427 | P. Krishnan | All |
| 9287 | M. Mariathangiah | Geography |

### Secondary Grade — Old Scheme

| No. | Name | Percentage of Marks |
|---|---|---|
| 6607 | K. S. Vasudevan | 41 |
| 6608 | J. Jesudasan | 33 |
| 6609 | R. Bashiyam | 33 |
| 6610 | T. Y. Magadevan | 42 |
| 6613 | S. M. Pasupathy | 37 |
| 6614 | K. Alagiyamanavalan | 38 |
| 6632 | S. Soosai | 48 |
| 6670 | S. Mariasavari | 43 |

| No. | Candidates failed : Name | Subjects in which failed |
|---|---|---|
| 6611 | N. Krishnaswami | Drawing & Blackboard work |
| 6612 | Ambrose A. Ranjitraj | Methods of Teaching Subjects |

## R. C. Model Higher Ele. School, Trichinopoly.

**Public Examination at the end of VIII Standard ;**

| No. | Candidates Passed : Name |
|---|---|
| 13826 | A. Pancras |
| 13827 | A. Xavier Ponniah |
| 13828 | S. Stanislaus |
| 13829 | R. Belavandram |
| 13832 | M. Nagarajan |
| 13833 | A. Mariasusai |
| 13835 | M. Irudayasamy |

நம் மாடல் ஸ்கூலில் மொத்தம் அனுப்பிய 10 மாணவர்களில் ஏழுபேர் தேறியுள்ளார்கள்—பொதுவாய் மற்ற பள்ளிகளில் இவ் வருஷம் பாஸ் செய்தவர்கள் பூச்சியமாயிருந்தாலும், நம் மாணவர்கள் 70% பாஸ் வெகு மெச்சத்தக்கது.

# ஆசிரியத்துவமும் அணியியலும்

(M. A. S. Udaiyar, Tamil Pandit, R. C. T. S.)

அழகை விரும்பாதார் யாரும் இல்லை. அழகில் உடலழகு, மனவழகு முதலிய பலவகை அழகுகள் இருப்பினும் கல்வி யழகே யாவற்றிலும் சிறப்புடையது. இதுபற்றியே 'குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல— நெஞ்சத்துள் நல்லம் யாம் மென்னு நடுவு நிலைமையால் கல்வி யழகேயழகு' என்று ஆன்றோர் கூறியுள்ளனர். அத்தகைய கல்வியழகு ஒருவரிடத்தமையவேண்டுமாயின், அக்கல்வியையூட் டும் செய்யுள் நூல் உரை நூல் முதலியவற்றுள் அடங்கிய தனித்தனியழகுகளையும் நன்கு உணருதல்வேண்டும். கலைப் பயிற்சிக்கும் விஷயாபிவிருத்திக்கும் அணி (அழகு) ஒரு இன்றி யமையாத சாதனமாகுமா என்பது ஒரு சிலருக்குள்ள சந்தேகம். 'அணி' உலகியலில் பழகப் புகும் ஒருவருக்கு எவ்விதமான முக்கிய சாதனமாகும் என்பதுபோன்ற சந்தேகம் மற்றொன்று.

உணவுண்பாரொருவர் உணவின் சுவையைப் பகுத்தறிதல் வேண்டுமா அவ்வாறறியவில்லையாயின் உணவின் பயன் உண் டார்க்குளவாகா தொழியுமாவென்று ஒருவர் ஐயுற்று வினவி னால், அவர்க்கு அச்சுவை நிலை நன்குணர்ந்தாரொருவர் அன்ப! சுவையும் பயனும் நன்குணராதான் ஒருவன் காலநிலைக்கேற்ற, இடநிலைக்கேற்ற, உடல்நிலைக்கேற்ற உணவினை நன்குணர்ந்து உண்ணாததனால், உணவின் பயனாய உடல் வளர்ச்சியில் எவ்வளவு ஊறுபாடடைகின்றான். அதனால் அவன் இடருறுதலேயன்றி அவனைச் சார்ந்தாரும் இடருறுவரன்றே. அதனால் உணவின் சுவையும் பயனும் நன்குணருதல்வேண்டும் என்று கூறுவ ரன்றே? உணவு நேரே உலகியலொழுக்கிற் பயன்றருமாவென் பார்க்கு, "உலகியல் நெறியறிந்து ஊக்கமுடன் உழைத்தற்கேற்ற உடலை வளர்க்கும் முகத்தால் உணவு பெரும் பயன்றரும். உண வின்றேல் உடல் இல்லை; உடலின்றாயின் இகபர சாதனங்களின் வளர்ச்சி சிதையும். ஆதலின் உலகியலொழுக்கிற்கு உணவு மிக வும் இன்றியமையாதது. அதனால், ஒவ்வொரு உணவின் சுவை பயன் முதலியவற்றை நன்குணர்ந்து காலதேச உடல் நிலைக் கேற்ப உண்டு பயன்பெறுதலே தகுதியுடையது" என்று அறி வுறுத்துவாரன்றே?

அங்ஙனமே கல்வியாகிய உணவையுண்டு பயன் பெற விரும்புவான் அக்கல்வியையூட்டும் செய்யுள் முதலியவற்றுள் உள்ள சுவையாம் அணியினை நன்குணர்ந்து கால தேச அறிவு நிலைக்கேற்பக் கலைபயிலானாயின் அக்கலை பயனுறுதொழிதலே யன்றிப் பயில்வோன் காலத்தையும் கெடுத்தொழிக்கும்; மற்றும் பொருளுணர்ச்சியை மிகத் தருவதாய அறியியலை அறியா தொழியின் கலாபிவிருத்தி குன்றிக் கற்பான் இடையூறுறுதலேயன்றிக் கற்பானுடன் சார்ந்தாரும் அவன்பாற் கற்பாரும் இடையூறுறுதல் ஒரு தலை ஆக.

கலையாராய்ச்சியிற் புகும் எவருக்கும் அணியியல் இன்றியமையாதது என்பதும், அவருள்ளும் ஆசிரியராவார் எப்பாடு பட்டாயினும் அணியியலை ஓதியுணர்ந்து தெளிதல்வேண்டும் என்பதும் ஒருதலை. அத்தகைய அணி யியலை முற்றுறக் கற்கா விடினும் ஏற்பன கற்கவேண்டும் என்பதை மனத்திருத்தி ஏற்பன மேலே செய்வாம்.

---

## விடு கதை

A. Arulanandam

### இது என்ன?

1. நான்கு ஆற்றுநீரை ஒரு நவாக்கொட்டைத் தேக்குகிறது.

2. போனான், கூப்பிட்டேன், வந்தான், நீட்டினேன், போட்டான், அழுதேன்.

3. உள்ளே வெள்ளிக்கட்டு வெளியே செங்கல்கட்டு.

4. தட்டைத்தின்னும், தான் தின்னும், குச்சித்தின்னும் எந்தன் செவ்வல் காளை. தண்ணீர்போட்டால் செத்துப்போகும் எந்தன் செவ்வல் காளை.

5. கோணக் கோணப் புளியங்காய், கொங்கநாட்டுப் புளியங்காய், உங்கள் நாட்டிற்குப்போய் எங்கள் நாட்டிற்கு வருகிறது.

---

# கல்வி

(P. Marimuthu Mariasusai)

திருவருளே, குருவடியே, திருத்துளமே, நன்முக, குரு வாழ்க, குருவேதுணை.

உலகிலுள்ள சகல சிருஷ்டிப் பொருட்களிலும் மிகச் சிறந்தது மானிடப் பிறவியே. மானிடர்கள் ஒருவருக்கொருவர் நாகரீகம், நடையுடைபாவனை, மனப்பான்மை முதலியவற்றில் வேறுபட்டே காணப்படுகின்றனர். எல்லோரும் மனித உடம்பெடுத்ததின் லக்ஷியம் ஒன்றே. ஆதலால் அதைப் பெறுவதற்கான முறையில் மனதைத் திருப்பிவிட யாவரும் கூன் உள்ளவராவர். அதற்குச் சாதகமாகவே கல்வி அமைந்துளது. ஆக, கல்வி என்றால் என்ன? என்கிற கேள்விக்கு இற்றைநாள்வரை உண்டாயிருக்கின்ற அநேக பொருத்தமான பதில்களில் ஒன்று "மனிதன் தன் மனோசக்தியைத் தன்வயப்படுத்தி, அதைச் செலுத்தத்தக்க துறையில் செலுத்த உதவுவதே கல்வி எனப்படும்," என்பது. இதன் சுருக்கமான விளக்கமாவது:—

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தகரணங்கள் நம்மான்மாவோடியைந்துள்ளன. புத்தி சொல்லுகிற முறையில் மனம் ஒத்து நடந்தால் ஆன்ம சக்தி விருத்தியடைகிறது. மனம்போன போக்கிலே புத்திக்கொவ்வாதவிதமாக நடப்பது ஆன்மா க்ஷீணிக்கக் காரணமாகிறது. ஒருவன் எவ்வளவு ஏட்டுக்கல்வி கற்றிருப்பினும் அதனால் பிரயோசனமில்லை. சாதனையில் மனோசக்தியைத் தன் வயப்படுத்துகிறவனே உண்மையில் கல்விமானாகின்றான்.

மாதா, பிதா, குரு, தெய்வமாகியோர் காட்டிய வழியில் நடப்பதே நமக்கு நலந்தருமென நம்பி, அதன்படி நடக்க முயற்சிப்பதே மனதைச் செலுத்தத்தக்க துறையாகும்.

நமது லக்ஷியம் கைகூடுகிறவரையில் கல்வி நமக்குதவுமேயொழிய, கல்வியே நமது லக்ஷியம் அன்று. கல்வி உதவியாக இருந்து நமக்கு உண்டாக்கும் பயன், இறைவன் திருவடியை நம் மனம் விடாது பற்றச்செய்வதேயாகும்.

---

## ‘கணித போதனையில் உபகரணங்கள்’ அவசியமாவதேன்?

(N. R. திருவேங்கடம்)

கணித பாடமானது தனி எண் அல்லது கருத்துப்பொருள் சம்பந்தப்பட்டதோர் சாஸ்திரமாகும் (abstract science). அதாவது கருத்துப் பொருளாலாகிய எண்களால் ஆக்கப்பட்டதாகும். எண்களைத் தனியாக விளக்குவது இயலாது. வர்ணங்களை எவ்விதம் பொருட்களினின்று பிரித்தல் சாத்தியமற்றதோ, அவ்விதமே எண்களையும் பொருட்களிலிருந்து பிரித்தல் இயலாது. உதாரணமாக 10 என்று சொன்னோமானல், 10 என்ற எண்ணிக்கையைக் குறிக்கக்கூடிய ஒரு பொருளைத்தான் அவ்வெண் குறிப்பிடுமே ஒழிய வெறும் 10 ஐ அன்று. விருதாவாக ‘நான் பத்து கொண்டு வந்தேன்’ என்றால் அதில் எவ்வித அர்த்தமாவது காணப்படுகிறதா? ஆனல் ‘நான் பத்து படங்கள் கொண்டு வந்தேன்’ என்று கூறும்போது அவ்வெண்ணுக்கு அர்த்தமிருப்பது தெரிகிறது.

எனவே எண்ணைத் தனியாக அர்த்தம் பண்ணமுடியாதென்றும் அதனைச் சரியாக விளங்கிக்கொள்ள பொருட்களே இன்றியமையாத சாதனமாய் விளங்குகின்றதென்பதும் அறிகிறோம். ஆனல் எண் பொருளுக்கே உரியது என்று நினைத்துவிடுதல் தகாது (Number is not psychologically got from things). மேலேகாட்டிய உதாரணத்தில் படங்கள் எத்தனை என்ற எண்ணிக்கையைக் குறிக்கவே 10 என்பது துணைக் கருவியாக நின்றது. இப்படிப்பட்ட கருத்துப்பொருள் அடங்கிய எண் சம்பந்தப்பட்டதே கணிதம். எனவே கணிதத்தை இளஞ் சிறுவர்க்கு நாம் போதிக்கும்போது பற்பல உபகரணங்களைக் கையாடுவது அவசியம் என்பது சொல்லாமலே விளங்கும். ஏனெனில் பொருளோடு எண் சம்பந்தப்பட்டால் மட்டுமே எண் அர்த்தசாரப்படும் என்பதை அறியுங்கால் உபகரணங்களின் மேன்மை விளங்குகின்றதன்றோ?

கணித போதனைக்கே இருதயமாய் விளங்குவது எண்ணறிவு புகட்டலே என்றால் அது மிகையாகாது. ‘இவ் வெண்ணறிவோ எனில் சிறுவர்களின் மனோவளர்ச்சியை ஒட்டியே ஏற்படும்’

என்பதாக 'Miss Drummond' என்ற எண்போதனை ஆராய்ச்சியாளர் அபிப்பிராயப்படுகிறார். இதை நோக்குமிடத்து, சிறுவர்களின் மனோ வளர்ச்சி நிலையினையும் நாம் கருத்துட் கொள்ள வேண்டுவது அவசியமாகிறது. சிறுவர்க்கு எண்ணறிவு புகட்டும் நிலையில் அவர்களின்மனம் புலன் உணர்ச்சிப்பருவத்தில் இருக்கிறது. புலன்களே எல்லாவித அறிவிற்கும் அஸ்திவாரமானது என்பதை நாம் அறிவோம். எனவே சிறுவர்களின் பல்வேறு புலன்களையும் (கண், காது, கைகள்) எண்ணறிவைப் பெறுவதற்கு ஏற்ற வழியில் பயிற்சித்தல் அவசியமாகிறது. புலன்கள் யாவற்றினும் கண்ணே சிறந்ததாய் இருப்பதால், சிறுவர்களின் கண்களுக்கு விருந்தளிக்கும் பல்வேறு கவர்ச்சிதரும் பொருட்கள் பந்துகள், கனசதுரங்கள் முதலியவையும், மாண்டிசோரி அம்மையாரால் கையாளப்பட்ட வர்ணக் கட்டைகள், மணிக்கோர்வைகள் முதலியவற்றையும் மாணவர்கள் அதிக சந்தர்ப்பங்களில் கையாட நாம் உதவிவந்தால் மாணவர் எண்ணறிவில் நன்கு தேர்ச்சியுறுவர்.

மற்றும் மாணவர்களை உற்றுநோக்கும் வேலையில் (Observational work) பயிற்சித்தலும் கணித போதனைக்கு அவசியமாகிறது. இப் பயிற்சி அளிக்கப் பலவகை வர்ணங்கள் தீட்டப்பட்ட எண்படங்கள், எண் அட்டைகள், எண் சார்ட்கள், நானாவித விவரணங்கள் (Illustrations) சந்தர்ப்பத்திற் கேற்றவாறு வரையப்பட்ட பட விளக்கங்கள் (Diagrams) முதலிய சிறுவர் கண்களைக்கவரும் சித்திர விளக்கங்களை அவ்வப்போது கையாடுதல் மாணவர் எளிதில் கணிதவிஷயங்களை அறியவும், சுலபமாக மனதில் இருத்தவும், உற்சாகத்தோடு கற்கவும் சாதகமாய் உள்ளன.

மேலும் மாணவர் இளம்பிராயத்தில் விளையாடும் மனப்பான்மையை உடையவர்கள் என்பதனையும், இவ்விளையாட்டு மனப்பான்மையை கணிதவிஷயங்களை அறிவதில் பயன்படுமாறு செய்யலாம் என்பதையும் நாம் உணர வேண்டும். கற்பவனின் மனோநிலையை ஒட்டிப் பயிற்றப்படுதலே இரு சாரார்க்கும் நன்மை அளிப்பதாகும். இங்ஙனம் மனோநிலையை ஒட்டிப் போதித்தலே மனோவளர்ச்சிக்கு ஏற்றசாதனம் என்பதையும், மனோவளர்ச்சியை ஒட்டியே எண்ணறிவு ஏற்படும் என்பதையும் உணருங்கால் இவ் விளையாட்டு மனப்பான்மையையும் கணக்கில் பயன்படுத்தல்

அவசியமெனலாம். எனவே, இதற்கு ஏற்றவையான ப்ரோ பலின் (Froebel) விளையாட்டுப் பொருட்களைக் கொடுத்து விளையாடச்செய்வதும், எண் விளையாட்டுகளை விளையாடச்செய்வதும் ஏற்றவை. எண் விளையாட்டுக்கேற்ற அநேக கிராமாந்தர விளையாட்டுகளும் உள்ளன. அவைகளை சென்னை சைதாப்பேட்டை போதனுமுறைக் கல்லூரியின் கிண்டர் கார்டன் (kinder-garten) வகுப்பு போதகாசிரியரான திரு. ஜகன்னுதன் அவர்கள் பலருக்கும் பயன்படும்விதமாகப் பத்திரிகைகளில் எழுதி வெளியிட்டு வருகிறுர். அவைகளை நாம் சேகரித்து நம் கணித போதனைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதுமட்டுமின்றி, கணிதமோ மற்றப்பாடங்களைப் போலின்றி மாணவர்களின் பள்ளிக்கூட வாழ்க்கையிலும், மற்றும் பிற்கால வாழ்க்கையிலும் பெரிதும் பயன்படுவதாக உள்ளது. வாழ்க்கையில் எண்ணுதல் பொருளோடு சம்பந்தப்பட்டு அநேக சந்தர்ப்பங்களில் கையாளப்படுகிறது (Mathematical aspect of things) எண்ணுங்கால், நான்கு முக்கியவிதிகளான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்ற நான்கு அம்சங்களே வாழ்க்கையில் பெரிதும் உபயோகமாவதை அறியலாம். இந் நான்கு அம்சங்களிலும் எண்ணை உபயோகியாமல் வாழ்க்கை நடத்துவது இயலாததாகும். ஆகவே நடைமுறையில் அதிகம் பயன்படும் இந் நான்கு விதிகளிலும் செவ்வையான பயிற்சி மாணவர் பெறுவதற்கு ஏற்ற கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் சார்ட்களும் (Charts) இவைகளின் பல்வேறு சேர்க்கை சம்பந்தமான (Combinations) நானுவித சார்ட்களும் உபயோகிப்பதால் மாணவர் எண்ணறிவிற்கு அடிப்படையான நான்குவிதிகளில் தகுந்த தேர்ச்சிபெற்று பள்ளிவாழ்க்கையிலும் அவர்களின் பிற்கால வாழ்க்கையிலும் சோபித்து விளங்குவர் என்பதில் ஐயமின்று.

எனவே சிறுவர்க்குக் கணிதம் போதிப்பதைக் கடமையாகக் கொண்ட ஆசிரியர் அனைவரும் மேற்கூறியவைகளைக் கருத்துட் கொண்டு தங்கள் தங்கள் வகுப்புகளில் அதிகமான உபகரணங்களைக் கையாடி பிள்ளைகள் முற்றிலும் நற்பயனடைவதற்கு வழி தேடுவார்களாக!

## List of A. R. P. Slogans

## ஆகாய விமானத்தாக்குதலின் பாதுகாப்பைப் பற்றிய விருதுவாக்கியங்கள்

1. உங்களுக்கு உதவ பாதுகாப்பாளர் (Wardens) உளர். அபாயச்சங்கு ஊளையிடும்போது புகுமிடங்களுக்குள் (Shelter) புகுந்துகொள்ளுங்கள்.

2. சங்கு ஊளையிடுகையில் உள்ளேயே இருங்கள்—வெளியே வாராதீர்கள்.

3. குழிகளைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுங்கள். உங்களைப் பாதுகாக்கவே அவைகள் தயாரிக்கப்பட்டவை.

4. சங்கு ஊளையிடும்போது புகுமிடங்களிலேயே இருங்கள். மிகவும் பத்திரமாயிருப்பீர்கள். பாதுகாப்பாளர் (Wardens) உங்களுக்கு உதவிபுரிவர்.

விரோதிகளின் விமானத்தாக்குதலுக்குத் தப்ப நீங்கள் தயாராயிருக்கின்றீர்களா? அப்படியானல்—

1. உங்கள் வீட்டிலுள்ள பிரகாசமான விளக்குகளுக்கு ஏற்ற மறைவு (Shade) ஏற்படுத்தியிருக்கிறீர்களா?

2. மணல் பைகளை (சாக்கு) சேமித்து வேண்டிய அளவுக்கு வைத்திருக்கிறீர்களா?

3. தீயை அணைப்பதற்குப் போதிய ஜலம் நிரப்பித் தயாராய் வைத்திருக்கிறீர்களா?

4. தாக்குதல் ஏற்பட்டால் வீட்டில் ஒதுங்குவதற்கேற்ற "அறை" இன்னதென்று தெரிந்து வைத்துக்கொண்டீர்களா?

5. மோட்டார்கார்களின் வெளிச்சத்தைத் தணிக்கத்தக்க திரை, அல்லது மூடிகள் அமைத்து வைத்திருக்கின்றனவா?

குறிப்பு:— சங்கடம் அல்லது சந்தேகம் ஏற்பட்டால் உடனே உங்களுக்குச் சமீபத்திலுள்ள பாதுகாப்பாளரை (Warden) அணுகிச் சொல்லுங்கள். அவர் உதவி செய்வார்.

## பாடக் குறிப்பு

(A. Rayappan)

2-ம் வகுப்பு — நேரம்: 30 நிமிஷங்கள்

### பாடம்: பூகோளம்

**நோக்கம்:** தூரதேசச் சிறுவர்கள்—எஸ்கிமோ சிறுவன்.

**உபகரணங்கள்:** கீழ்க்கண்ட பொருள்களைக் குறிக்கும் படங்கள், உருவங்கள் etc.

1. எஸ்கிமோ பையன்—உடை அணிந்திருக்கும் விதம்.
2. எஸ்கிமோ கூடாரம், படகு, ஸ்லெட்ஜ் வண்டி, அவ்வூர் நாய்கள்.
3. சீல்பிராணி, வேட்டையாடும் ஆயுதம், ஈட்டி, கத்தி.

**பீடிகை:** நம் ஊர் சிறுவர்களின் உடை, அப்படி உடை தரித்திருப்பதின் காரணம், அவர்களின் தொழில்கள், விளையாட்டுகள் முதலியவற்றைப்பற்றி சம்பாஷித்தல்.

**நோக்க வெளியீடு:** நம் ஊருக்கு அநேக ஆயிர மைல்களுக்கப்பால் உள்ள சிறுவர்களைப்பற்றி இன்று நாம் படிப்போம்.

**விஷயம்:** நம் ஊருக்கு வெகு தூரத்திற்கப்பால் உள்ள பிரதேசம், அதிகக் குளிரான இடம், எப்பொழுதும் பனி உறைந்திருக்கும், அது துந்திரப் பிரதேசம். அங்குள்ள ஜனங்கள் எப்பொழுதும் கம்பளி உடை அணிவார்கள். சிறு பையன் பெயர் ஊட்டா. தகப்பனர் சீல் வேட்டையாடுவார். தாயார் சீல் தோலால் ஆடை தயாரிப்பாள். பிள்ளைகளும் வேட்டையாடுவர். உணவு தயாரித்தல், சீல் மாமிசத்தைப் பச்சையாக சாப்பிடுவார்கள். ஆகையால் எஸ்கிமோ ஜாதியார் என்று பெயர்.—வீடு பனியால் கட்டப்பட்டது. சாமான்கள் கொண்டுபோக ஸ்லெட்ஜ் என்ற சக்கரமில்லாத வண்டி. நாய்கள் அதை இழுக்கும்—சீல் வேட்டையாட சீல் எலும்பால் செய்யப்பட்ட ஈட்டி, கத்தி, etc.

**முறை:** விஷயத்தைக் கதை ரூபமாகச் சொல்லுதல். உபகரணங்களின்மூலம் எஸ்கிமோ கூடாரம்—ஸ்லெட்ஜ் வண்டி, படகு, வேட்டை ஆயுதங்கள் இவற்றை விளக்கும் படங்கள் உருவங்களை உடனுக்குடன் காட்டிப் போதித்தல். எஸ்கிமோ சிறுவர் தொழில்களை நம் ஊர் பிள்ளைகள் தொழில்களோடு சம

பந்தப்படுத்தியும் சீதோஷ்ண நிலைமை அதற்கேற்ற உடை இவற்றையும் சம்பந்தப்படுத்தலவசியம்—கதைரூபமாகச் சொல்லுதல் அத்தியாவசியம்.

அப்பியாசம் :

1. எஸ்கிமோ ஜாதியார் எங்கு வசிக்கிறார்கள் ?
2. அவர்கள் வசிக்கும் பிரதேசம் எப்படிப்பட்டது ?
3. அவர்களுக்கு எஸ்கிமோ ஜாதியார் என்ற பெயர் வரக் காரணம் என்ன ?
4. அவர்கள் உடை எப்படித் தயாரிக்கப்படுகிறது ?
5. எஸ்கிமோ சிறுவன் பெயர் என்ன ? என்ன வேலைகளை அவன் செய்கிறான் ?
6. சாமான்களை எவ்வாறு வேறோரிடம் கொண்டு போகிறார்கள் ?

க. ப. சு : முக்கியப் பெயர்களை எழுதலாம்—எஸ்கிமோ, ஊட்டா, ஸ்லெட்ஜ், சீல்.

குறிப்பு :—எஸ்கிமோ சிறுவர் மீன் பிடித்தல் வேட்டையாடுதல் முதலியவற்றை விவரமாக அடுத்த நாள் பாடத்தில் போதிக்கலாம்.

---

## விடுகவி விடை

(கொத்து 32, மலர் 12, பக்கம் 316.)

விடை :—(1) புரசு ; சங்கு ; கல்கத்தா ; கர்நாட்டு ; கந்தசாமி ; மனோன்மணி.

ஷை விடையளித்தவர்.—S. Fernandez, Neikuppai.

2. அரசு ; சங்கு ; நகர் ; அநாதி ; மதலை ; கன்னி.

ஷை விடையளித்தவர்.—R. S. Vellayappan, P. M. Gudalore.

3. இராமச்சந்திரா.

ஷை விடையளித்தவர்.—C. Jeyamary, St. Joseph's Rice Mill, Perambalur.

[குறிப்பு] ஷை விடைகளுக்குரிய விடுகவியையும், அதன் விடையையும், உரிமையுடையார் திரு பண்டிட் ராமலிங்கம் என்பவர் அடுத்தமாதத் தொடக்கத்தில் நமக்கு அனுப்பிவைப்பாராக.

(பத்திராதிபர்.)

182298

# பள்ளிக்கூடத் தோட்டம்

(P. M. B. Mariamichaelsamy)

பள்ளிக்கூடத்தோட்டம் பள்ளிக்கூடத்திற்கு மிக அவசியமாகும். இது இயற்கைப்பாடத்திற்கு முதல்தரமான சாதனமாகும். (1) நிலத்தின் தன்மையையும் செடிகளின் வளர்ச்சியையும் அறியக்கூடிய இடமாய் இருக்கிறது. (2) நாம் விவசாயிகளுக்கு சாஸ்திரரீதியில் விவசாய முறை கற்பிக்கும் இடமாக வைத்துக்கொள்ளலாம். (3) இது தேக ஆரோக்கியத்திற்கு வேண்டிய தேகப்பயிற்சியும், நல்ல காற்றும் கிடைக்க வழியாகிறது. (4) தோட்ட வேலையானது ஒற்றுமையையும், யோக்கியமான போட்டாப்போட்டியையும், சுத்தத்தையும், ஒழுங்கையும், இயற்கையின் அழகைக்கண்டு களிக்கவும் இடம் தருகிறது. (5) நல்ல முறையில் தோட்டப்பயிற்சி ஏற்படுதல் தினசரி வாழ்க்கைக்கு இன்றியமையாதது. (6) தோட்டம் பாடத்தில் சிரத்தையில்லாதவர்களுக்குச் சிரத்தையையும், நல்ல ஆஜரையும், பிள்ளைகளின் நடையுடைபாவனைகளையும் சீர்படுத்துகிறது. (7) இயற்கையின்பால் அன்பு ஏற்படுகிறது, சுறுசுறுப்பையும் தெய்வபக்தியையும் உண்டுபண்ணுகிறது. (8) நம்மில் பெரும்பாலோருக்குப் பொழுதுபோக்காயும் இருக்கிறது.

**தோட்ட இடம்.**—இது பள்ளிக்கூடத்திற்கு வெகு சமீபத்தில் இருக்கவேண்டும். தண்ணீர் சௌகரியமான இடமாக இருக்கவேண்டும். நல்ல சூரிய வெளிச்சம், காற்றோட்டமுள்ள இடமாக இருக்கவேண்டும். நிழலைக்கொடுக்கும் மரங்களும் இருக்கக்கூடாது. இருந்தால் வெட்டிவிடவேண்டும். செழிப்பான தரையாய் இருக்கவேண்டும். நல்ல வேலியோ அல்லது மூங்கில் வேலியோ நல்லது. இடம் தாராளமாய் இருக்கவேண்டும். உபாத்திமார்களுக்கும், பிள்ளைகளுக்கும் தனித்தனி இடம் இருக்கவேண்டும். தோட்டத்தில் உண்டாகும் மரங்கள் செடிகளுக்குத் தொந்தரவாய் இருக்கக்கூடாது. சுற்றி நல்ல ஊற்றுக்கால்கள் இருக்கவேண்டும். பிள்ளைகளுக்குத் தக்கவாறு தோட்டம் இருக்கவேண்டும்.

பாத்திக்கு இரண்டு மூன்று சிறுவர்கள் வீதம் சேர்ந்து தோட்டம்போடலாம்; ஆனால் தனித்தனிப் பாத்தி முறை மிகவும் சிறந்தது. பையன்களும் உபாத்தியாயர்களும் தனித்தனித் தோட்ட டையரி வைத்திருக்கவேண்டும். அதில் பலதரப்

பட்ட செடிகளின் உற்பத்தி, வளர்ச்சி, நாற்றுப் பாவுவது, பிடுங்கி நடுவது முதலிய விஷயங்களேயும், செடிகளை அழிக்கும் புழு பூச்சிகளேயும், தோட்டங்களுக்கு வரும் பறவைகள் அவை நாடும் விளேச்சல் முதலியவைகளேயும், மழை அளவையும் அப்போதைக்கப்போது டையரியில் குறிக்கவேண்டும்.

**தோட்டச்சாமான்.**—தக்க சாமான்கள் வேண்டும். களே கொத்துகள், மண்வெட்டிகள், அரிவாள், வாளி, பூவாளி முதலியன வேண்டும். இவற்றை ஒரு அறையில் வைத்திருப்பது நல்லது.

**உரம்.**—ஆடுமாடுகளின் சாணம், தழைகள் முதலிய இயற்கை உரங்களோடு உப்பு, எலும்புத்தூள் முதலியவைகளே யும் உபயோகிக்கலாம்.

**பள்ளிக்கூடத்தோட்டத்தை ஆராய்ச்சியிடமாக்கலாம்.** ஒருவிதச் செடியை திரும்பத்திரும்ப நடுவதினல் ஏற்படும் மாறுதல்களே விளக்கலாம். ஒரேவிதையைப் பலதரப்பட்ட ஆழத்தில் போடுவதின் பலனே அறியலாம். பல மாதங்களில் ஒரே விதையைப் போட்டு அவைகளின் பலன்களே அறிந்து தக்க காலத்தைக் கண்டுபிடிக்கலாம். ஒரே விதையைப் பல இடங்களில் போட்டு தக்க நிலத்தைக் குறிப்பிட்ட பயிருக்கு நிச்சயிப்பது, சூரிய வெளிச்சத்தின் அவசியத்தைக் காண்பது, செடிகளின் விரோதிகளின் ஜீவியத்தைக் கண்டு பரிகாரம் தேடுவது, முதலியவற்றை ஆராயலாம்.

தோட்டத்தில் உற்பத்தியாகும் செடிகள் எல்லாம் கிராமத்திற்குத் தக்கவாறு இருக்கவேண்டும். விளேச்சல்களேப் பையன்கள் எடுத்துக்கொள்ளுவதால், நல்ல தோட்டம் உண்டாகிறது; உற்சாகம் ஏற்படுகிறது. அம்மாதிரி செய்வதால் பிள்ளேகளுக்குக் கஷ்டமான வேலேயாகத் தோன்ருது. தோட்டவேலே செய்வதற்கு மாலே நேரமே தக்கது.

ஆகையால் சகோதர ஆசிரியர்கள் பள்ளிக்கூட வேலேக்குப் பள்ளிக்கூடத் தோட்டம் எவ்வளவு உதவிசெய்கிறதென்பதையும் ஊருக்கு எவ்வளவு பயன்படுகிறது என்பதையும் கருதிப் பள்ளித் தோட்டத்தை உயர்நிலேக்குக் கொண்டுவருவார்களாக!

# எனது பிறப்பு.

## (M. D. Poobal)

### ஒரு ரூபாய் சொல்லுவது

என்னைப் பெண்ணென்றும், மாயையென்று மெண்ணுதீர். பெரும்பாலோரென்னை 'லெக்ஷிமி, சீதேவி' என்று மனமார வாழ்த்தும் அதே தருணத்தில், சிலர், 'மாயை, பேய்' என அபசாரமாய்த் தூற்றுவதை என்மனம் எவ்விதம் சகிக்கும்? நான் பெண்ணுமல்ல, மாயையுமல்ல; ஆனல் யார் என்பதை எனது சரித்திரத்தாலறிவீர்.

ஒரு நாள் ஒரு அபாக்கியவான் என்னை இழுத்துக்கொண்டு, ஒரு பாங்கித் தலைவனிடங்கொண்டுவிட்டான். அவ்விரக்க மற்ற பாவி, இரும்பு சுத்தியலால் என் தலையையுடைத்து, என்னைப்போல் தலை கைகால் ஒடியக்கொடுத்த என் இனத்தாரான வெள்ளைகளுடன் போட்டுவிட்டான்.

சிலநாள் சென்றபின் எங்களெல்லோரையும் ஓர் இயந்திர சாலைக்கனுப்பினன். அப்பப்ப! அங்கனுபவித்ததை நினைக்கவே என் உள்ளம் நடுங்குகிறது. ஒருவன் எங்களை நிறுவையிலிட்டு, எங்களுக்குப் பக்கத்துணையாக வேறுசில இனத்தவரையும் (சிவந்த மேனியர் செம்பு) எங்களுடன் அனுப்பினன். வெகு அன்பு காட்டி மயக்கிய ஒருவன் நயப்பேச்சில் லயித்ததால் அவன் எங்களெல்லோரையும் எரியும் அக்கினிச் சூளையில் தள்ளினன். அங்கு கண்ணிமைப் பொழுதுக்குள் எங்கள் மேனி பாகாயிற்று. சிறிது நேரத்தில் பலர் எங்களை வாளிகளில் எடுத்து கண்மூக்குத்தெரியாத ஓர் இயந்திரத்தில் கொட்டினர். அங்கிருந்து எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு பெரும் வெண்ணிறத் தகடாக வெளியே வந்தோம். கனகனவெனக் காய்ந்துகொண்டிருந்த எங்கள் உடலைச் சிறிது ஆறவிட்டு, மற்றுமோர் இயந்திரத்தில் இபக்க, அது எங்களுடலில் $1\frac{1}{5}$ அங்குல விட்டார்த்தமுள்ள வட்டமாக பலநூறுகண்களிட்டன. பின்னர் அம்முறையில் கிடைத்த எங்களை ($1\frac{1}{5}$" விட்டார்த்தமுள்ள) மற்றுமோரியந்திரத்தில் செலுத்த, அங்கு இரும்பொலக்கையொன்று எங்கள் ஒவ்வொருவரையும் குத்தியது. இக்குத்தால் எங்கள் மேனியில் ஒருபுறம் ராஜ முத்திரையும் மற்றோர்புறம் எழுத்தலங்கார

மும் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு அடியின் அடையாளங் கொண்ட எங்களைப் பிறிதோர் இயந்திரத்தில் தள்ள அங்கிருந்து வெளி வரும்போது எங்கள்மேனி மிகுந்த பளபளப்பாயும் தூய வெண்மையாயு மிருந்தது. எங்கள் நிறத்தால் கவரப்பட்ட பலர் எங்களை அள்ளி எடுத்து பைகளில் இலக்கமுடன் கட்டி கஜனாவில் சேர்த்தனர். அங்கிருந்து நாங்கள் ஒவ்வொருவரும் பிரியா விடை பெற்றுக்கொண்டு இத்தேசத்தின் பற்பல பாகங்களுக்கும் பிரயாணப்பட்டோம். நான் ஒரு தருமவான் கையில் போய்ச் சேர்ந்தேன். அவரிடமிருந்து நான் பற்பல கை கடந்து ஒரு ஆசிரியர்கையில் சேரநேர்ந்தது. அவர் உடனே என்னை திருச்சி 'போதனாவிஷயப் பூங்கொத்து' காரியாலயத்திற்கு அனுப்பிவிட்டார். இங்கு எனது பிறப்பை அறிவிக்க அவாக் கொண்டு பூங்கொத்தின் ஆசிரியரும் அதை நடத்துபவருமான சங். லூர்துசுவாமி, பி. ஏ., எல். டி அவர்களிடம் எனது அபிலாஷையைத் தெரிவிக்க, அன்னவரின் கருணைநிறைந்த உத்தரவால், நான் அனுபவித்த கஷ்டத்தை மறந்து, இன்புற்று இதை வெளியிட்டேன்.

---

## விவசாயப் பழமொழிகள்

(A. S. Ignatius)

1. மணலுழுது வாழ்ந்தவனுமில்லை, மண்ணுழுது கெட்டவனுமில்லை.
2. உழ அற உழுதால், விளைவரவிளையும்.
3. ஆழ உழுதாலும் அடுக்க உழு.
4. கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்.
5. எரு இல்லாப் பயிர் கன்றில்லா மாட்டைபோல்.
6. சேரி எரு சேகரமுண்டாக்கும்.
7. சோளப் பயிரை மேய்ந்த எருதுக்கு சொர்க்க போகம் வேண்டுமா ?
8. சோத்துக்கு ஏமாந்தால் சோளத்தை விதை.
9. கம்புக்குக் கால் உழவு.
10. சாமைப் பயிர் விளைந்தால் தெரியும்.

---

## நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

9–6–42. கோடை விடுமுறைக்குப் பின்பு, இன்று வகுப்புகள் தொடங்கலாயின. தொடங்குமுன், மாணவர்களும், ஆசிரியர்களும் சபாமண்டபத்தில் ஒன்றுகூட, சங். தலைமை ஆசிரியரவர்கள் கடந்த பரீட்சையின் முடிவைப்பற்றி ப்ரஸ்தாபித்து, மேல் வகுப்புக்கு மாற்றப்பட்ட மாணவர்க்கும் ஏனையோர்க்கும் புத்திமதிகள்கூறி, பாடசாலையின் முன்னேற்றத்திற்கும், படிப்பில் தேர்ச்சிக்கும் அனைவரும் உழைக்கவேண்டுமென வற்புறுத்தி, வகுப்புகளைத் தொடங்க வைத்தனர்.

**ஆசிரியர் சங்கக்கூட்டம்**: ஷை தேதியில் சங். தலைமை ஆசிரியர் அக்கிராசனம் வகித்து, ஆசிரியர்களின் அலுவல்களைப் பற்றி நினைப்பூட்டி, மாணவர்கள், மாணவ ஆசிரியர்கள் இவர்களை முன்னேற்ற இவ்வருஷம் செய்யவேண்டிய **கல்வி திட்டத்தைத்** தெரிவித்து, அனைவரையும் ஊக்கினர்.

30–6–42. புது மாணவர்களைப் போதனாமுறைப் பாடசாலையில் சேர்க்க, இன்று காலை வழக்கம்போல் ப்ரவேசப் பரீட்சை நடத்தப்பட்டது. இப்பரீட்சை எழுதவந்தவர்கள் பலர். எழுத்துப் பரீட்சை முடிந்தவுடன், வைத்திய சோதனை நடந்தது. தலைமையாசிரியரிடம் ஒவ்வொருவரும் ஆஜர் ஆகிய பிறகு, போதனா பயிற்சிக்காக, ஸெக்கண்டரி கிரேடுக்கும், எலிமெண்டரி கிரேடுக்கும் தேவையான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## சிறு கதை

### ஆமையும் வாத்துக்களும்

வெகுகாலத்துக்குமுன், ஒரு குளத்தில், இரண்டு வாத்துக்களும் ஒரு ஆமையும் சுகமாகக் கூடி வாழ்ந்துவந்தன. அங்கே சாப்பிடவும் குடிக்கவும் யாதொரு குறையும் இல்லை. வேறு எவ்வித தொந்தரவும் கிடையாது.

இப்படியிருக்கையில் குளம் வற்றிக்கொண்டுவந்தது. பகுத்தறிவற்ற பிராணிகளுக்குத் தெரியவில்லை. கடைசியில் குளத்தில் வெறும் களிமண்ணைக்கண்டு உண்மையை அறிந்துகொண்டன. உடனே, வேறு குளம் ஒன்றை நாடிப்போகவேண்டும் என்று முடிவுசெய்துகொண்டன. ஆனால் ஆமைக்கு வெகு கஷ்டமாயிருந்தது. பறந்து செல்லவும் முடியாது. நடந்து சென்று வாத்துக்களுடன் வாழ்வதும் கூடாத காரியம். தன்னுடைய நேசர்களுடன் வாழ அவாக்கொண்டது. இதுவரையி

லும் வெகுவாய் நேசித்த ஆமையை விட்டுவிட்டுப் போய்விட வாத்துக்களுக்கும் மனமில்லை.

இறுதியாக, ஒரு யோசனை செய்து அதன்படி, கெட்டியான ஒரு குச்சியை எடுத்து இரு நுனிப்பாகங்களை வாத்துக்கள் கடித்துக்கொண்டு பறப்பதாகவும் குச்சியின் நடுப்பாகத்தை ஆமை, வாயால் கடித்துக்கொள்ள வேண்டுமென்றும், ஆனால் பறந்துசெல்லுங்கால் ஒருவரும் பேசக்கூடாது என்றும் சத்தியம் செய்துகொண்டு பறந்தன. கொஞ்சதூரம் ஒழுங்காகப் பறந்தன. வாத்துக்கள் நிதானமாகப் பறந்துகொண்டு, ஒரு குளத்தைத் தேடிக்கொண்டிருந்தன. அப்படியே அவை ஒரு கிராமத்தின் வழியாகப் பறக்கையில், ஜனங்கள் ஓடிவந்து மூன்று பிராணிகள் செல்லும் விதத்தைப் பார்த்துக்கொண்டிருக்க, சிறு பிள்ளைகள் கூச்சலிட்டு அவற்றைப் பரிகாசம் செய்து, "ஆமை பெரு முட்டாளாயிருக்கிறது. கீழே விழுந்துவிடாதா; வாத்துக்களை நம்பலாமா" என்று நகைத்தார்கள். இதைக் கேட்டதும் ஆமை கோபங்கொண்டு, "நான் மதியீனன் அல்ல" என்று சொல்ல வாயைத் திறந்த சமயம், கடித்துக்கொண்டிருந்தக் குச்சி நழுவிவிட்டது. யாதொரு பிடியும் இல்லை. கீழே விழுந்தது. அதன்மேல் உள்ள ஓடுகளெல்லாம் நொறுக்குண்டன. வாத்துக்கள் வெகு தூரம் சென்றுவிட்டன.

கொஞ்சநேரம் கழித்து, மூச்சுத் தெளிந்ததும், ஆமையானது, சிதறிக்கிடந்த ஓடுகளையெல்லாம் பொறுக்கிச் சேர்த்து ஒன்றுக்கிவிட்டது. அதிலிருந்து ஆமையின் ஓடுகள் சேர்த்துவைக்கப்பட்டிருப்பதை இன்றும் நாம் காணலாம்.

---

## யோசனைக் கணக்கு

(S. R. Mahadeva Aiyar, H. M., Pedhanayakanur.)

1. ஒருவன் 9 வெள்ளாட்டுக் குட்டிகளும், 13 செம்மறியாட்டுக்குட்டிகளும் சேர்ந்து ரூ. 74–8–0-க்கு வாங்கினான். ஒரு வெள்ளாட்டுக்குட்டியும் ஒரு செம்மறியாட்டுக் குட்டியும் சேர்ந்து ரூ. 6–8–0 என்றால் ஒவ்வொன்றும் வாங்கின விலை என்ன ?

2. ஐந்து ஸ்தானமுள்ளதும், 203-ஆல் மீதியின்றி வகுக்கப்படக்கூடியதுமான சிறிய எண் எது ?

3. 299-ஆல் மீதியில்லாமல் வகுக்கப்படக்கூடிய 6 ஸ்தானப் பெரிய எண் எது ?

---

## மருந்து மூலிகைகள்

**திரிகடுகம் :**—சுக்கு, மிளகு, திப்பிலி இவை திரிகடுகம் எனப்படும். உலர்ந்த பதமான இஞ்சியே சுக்கு. இது வாயுவைக் கண்டிக்கும். இது சேராத கஷாயம், சூரணம், லேகியம் இரா. வயிற்றுக் கோளாறுகளை மிளகு எளிதில் நீக்கும். மிளகை நெய்யில்வறுத்து உட்கொள்ள ஜலதோஷம், தொண்டை கம்மல், அதியுஷ்ணம் இவை குணமாகும். கண்டதிப்பிலி வாயுவையும், அரிசி திப்பிலி கபத்தையும் குணப்படுத்தும்.

**அழக்கிராங்கிழங்கு :**—இதைப் பாலில் சுத்திசெய்து உலர்த்தி சூரணம்செய்து சீனி கலந்துண்டால் மலச்சிக்கல், வாயு, சரீர வெப்பம், சுரத்தின் பின்னர் ஏற்படும் பலஹீனம் ஆகியவற்றை எல்லாம் நீக்கும்.

**சாம்பிராணி, கற்பூரம் :**—இவைகளின் புகை தொத்து நோய் வரவொட்டாமல் தடுக்கும். நீர்க்கோவை, தலைப் பாரம் இவற்றை நீக்கும். இதன் தைலம் தலைவலி உடல் வலிகளை ஒழிக்கும்.

**அதிமதுரம் :**—வரட்டு இருமலை நீக்கும். உடம்பில் உள் புண்ணை ஆற்றும்.

**ஆளிவிதை :**—இதை அரைத்துக் கொதிக்கவைத்து கட்டினால் கட்டிகள் பழுத்து உடையும்.

---

## யோசனைக்கணக்கு விடை

(கொத்து 32, மலர் 12, பக்கம் 324.)

**விடை :**—ஆரம்பத்தில் இருந்த முட்டைகள் = 7.

நாளொன்றுக்கு விற்றவை = 8.

ஷை விடையளித்தவர்கள்.—1. N. Mudiappan, Teacher, St. Mary's Elementary School, Cantt., Trichy. 2. S. Fernandez, H. M., Labour School, Neikuppai, Perambalur. 3. R. S. Vellayappan, Teacher, Peria Mathia Gudalore, N. Thalaiyur, Karur. 4. A. Antonimuthu, El. Grade R. C. T. School, Trichy. 5. A. Irudayasamy, Teacher, Pudunaduvalur. 6. C. Jeyamary, St. Joseph's Rice Mill, Perambalur.

---

சுகாதாரம்

## தேக அமைப்பும் பாதுகாப்பும்

(G. Susaimanickam, H. M., Achangulam Ely. School.)

(ஆநந்தக்களிப்பு)

1. செந்தமிழ்ச் சிறுவரே கேளும்—நம்முடைய
தேகத்தினமைப்பதைத் தெரியச் சொல்லிடுவேன்
சிந்தையிற்பதிப்பீர் எந் நாளும்—பின்னும்
விந்தையாய் மறவாதீர் வீணாய் எந் நாளும்.

2. வாழுமந்த வீடு கட்டுங்கால்—கருங்கல்
வகையாய் கட்டைமணற் சுண்ணாம்புச் செங்கல்
ஜன்னல்கள் வாசல் கதவுடன்—அமைந்த
சாடையைப் போல் நம் தேகமதிலும்,

3. நரம் பெலும்பு சிவப்பு ரத்தம்—தோலுடன்
நாடும் கை கால்கள் காது கண் மூக்கு
கூடும் வாயுடன் குறித்த உறுப்பும்—என்றும்
ஓடும் நல்ல இந்த உயிர் பெற்ற இல்லம்.

4. செம்மையுடன் வைக்கும் வழியை—மலரில்
உண்மையுடன் உவந்திங்கு விதியை
பண்புடன் பாலரும் படிக்க—இதைப்
பத்திராதிபரும் பண்புடன் *அடிக்க,

5. நாடோறும் ஸ்நானம் செய்ய வேண்டும்—சுகம் பெற
நல்ல காற்றைத் தேடியுட் கொள்ளவேண்டும்
தெளி தண்ணீர் தினமும் பருகி—பலங் கொள்ள
தினமுந் தேகப் பயிற்சி செய்யவும் வேண்டும்.

6. சுத்தவுணவருந்தவேண்டும்—தினமும்
தூயவஸ்திரங்களை யணியவும் வேண்டும்
நேரத்தோடு நித்திரை செய்ய வேண்டும்—நம்மை
நேரும் வியாதிதனை தடுக்கவும் வேண்டும்.

---

* பிரசுரிக்க.

# கோலாட்டம்

(B. Thomas Victor, Music Teacher, R. C. T. S., Trichy.)

29, இராகம்-ஹிந்துஸ்தான் — திச்ரகதி ஆதி-தாளம்.

## பல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸா ஸ | கா ம | பா த | நீஸ் | ஸ்ா நி | தா ம | பா ம | கா, |
| எங்கும் | நிறைந் | தொளி | ருமா | தேவ | னைநாம் | பாடு | வோம் |
| பா ஸ் | நி த ப | ப த ப | ம க ரி | கா ப | ம க ரி | கா ஸ | ஸா, |
| மங்க | ளம்பு | கழ்ப | கர்ந்து | சிங்கா | ரக்கோ | லாடு | வோம் |

## அனுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க்ா ரி | க்ா ஸ் | ரீ நி | ஸ் க் ரி | ஸ்ா நி | தா ம | பா ம | கா, |
| மல்லி | முல்லை | ரோஜா | மணங் | கமழ் | மலர் | சாற்றி | யே |
| ரீ ரி | கா க | மா ம | பா த | ஸ்ா நி | தா ம | பா ம | கா ரி |
| கல்வி | செல்வம் | யாவும் | கூட | கர்த்த | னை நாம் | போற்றி | யே |

(எங்கும்)

## சரணங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா ப | நீ நி | ஸ்ா நி | ஸ்ா ஸ் | ப ஸ் நி | ஸ்ா ரி | ஸ்ா நி | தா, |
| சந்தர | சூர்ய | நக்ஷ | திரங் | கள்விண் | ணில்ஜொ | லித்தி | ட |
| மா ம | கா ம | பா ப | தா நி | ஸ்ா நி | தா ம | பா ம | கா ரி |
| சிந்தை | மகிழ் | தெங்கும் | பூவில் | நல்லி | சைஒ | லித்தி | ட. |

(எங்கும்)

2. ஆனந்தம் ததும்பிட அகம் களித்துல்லாசமாய்
ஞானத்யான கானப்ரிய தேவனைப் பணிந்திட (எங்கும்)

3. சத்தியத்தரசர்களும் வெற்றிமுடி மன்னரும்
இத்தரையில் வாழ்ந்திலங்க அத்தனைத் துதித்திட (எங்கும்)

குறிப்பு:—ஆரோஹணத்தில் காகலி நிஷாதமும் அவரோஹணத்தில் கைசிகநிஷாதமும் கொடுத்துப் பாடவேண்டும்.

---

பண்டாரம் :—(சுயம்பாகி சாப்பிடுகையில்) ஓய்! சுயம்பாகி, பங்கிட்டுத்தின்றால் பசியாறும், தானாய்த்தின்றால் வீணாய்ப் போகும் என்று சொல்லியிருப்பதை நினைக்கவில்லையா?

சுயம்பாகி :—ஆமாங்க, தனக்கு மிஞ்சித்தான் தான தர்மம் என்று சொல்லியிருக்கிறதே! மிஞ்சியானால் பார்த்துக்கொள்ளலாம்.

(S. Rajamanikkam.)

182278
சென்னை-600 008

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற
சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
6. கர்னாடக சங்கீத போதினி (4-ம் பாகம்)
ஆசிரியர்களுக்கும், ஆசிரிய மாணவர்களுக்கும் ... 0—8—0

விலாசம்: **A. GNANADICKAM,**
*South Indian Music School, St. Thomas Church Rd.*
*OOTACAMUND.*

---

# போதனை விஷயப் பூங்கொத்து

## காரியாலயம்

பூங்கொத்து வருஷ இதழ்களை ஒன்றாகச் சேர்த்து உபாத்திமார்களுக்கும், பாடசாலைகளுக்கும் எப்பொழுதும் உதவும்வண்ணம் புத்தகமாக டைபிண்டிங் செய்து அநேகர் வைத்துக்கொள்ளுகிறார்கள். அன்னவர்கள் பழைய தனி சஞ்சிகைகள் தேவையானபோது, பிரதி ஒன்றுக்கு ஒன்றரை அணா வீதம் அனுப்பவேண்டும். வேண்டிய பத்திரிகைகளின் மலர் நம்பரைத் தெரிவித்தால் அவைகளை அனுப்புவோம்.

பத்திராதிபர்.

Reg. No. M. 1534.

# OUR EMPLOYMENT BUREAU

1. Wanted a Secondary grade trained master or mistress for St. Joseph's Boys' Ely. School, Pothamettupatty near Manaparai. Apply to the Manager, R. C. Boys' Schools, Manaparai, Trichy Dt.
2. Wanted a Higher Ely. grade trained teacher immediately. Apply to the Manager, R. C. Schools, St. Francis Xavier's Church, Pallavaram, Madras.
3. Wanted 3 Secondary and 2 Higher Ely. trained teachers immediately. Mistresses may also apply. Apply to the Manager, Nammalwar Higher Ely. School, Namakkal, Salem Dt.
4. Wanted a Higher Ely. trained teacher. Apply to the Manager, R. C. Schools, Shembaganur P. O., Madura Dt.
5. Wanted many trained teachers for schools in the Perambalur Range. Apply to the Deputy Inspector of Schools, Perambalur Range, Perambalur, Trichy Dt.
6. Wanted a Secondary grade trained teacher to teach in the VI Standard. Apply to the Manager, St. Mary's Boys' School, Kotagiri, Nilgiris.
7. Wanted a Secondary grade teacher on Rs. 20/- per mensem. Apply to the Manager, R C. Schools, Anantarayankottai, Dindigul.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.